# புறநானூற்றில் இடம் பெறும் துளைக்கருவிகள்

*முனைவர் சீ. காளி கிருஷ்ணன்*
துணை முதல்வர்
மெரிட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இடைகால்

மலர்: 12
சிறப்பிதழ்: 1
மாதம்: மார்ச்
வருடம்: 2025
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI:
https://doi.org/10.5281/zenodo.14958697

***முன்னுரை***

*ஆதிகால மனிதன் தன்னுடைய உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள பயன்பட்டக் கருவிகள் பெரும்பாலும் வெறும் கருவிகளாக மட்டுமே பயன்பாட்டில் இருந்திருக்கின்றன. காலப்போக்கில் பண்படுத்தப்பட்டு இசையை இசைக்கும் இசைக்கருவிகளாகத் தோற்றம் பெற்றிருக்கின்றன. சங்ககால மனிதர்களிடையே வழங்கி வந்துள்ள பயன்பாட்டிற்குரியச் சில துளைக்கருவிகள் புறநானூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.*

***புறநானூறு***

*நானூறு புறப்பாடல்களின் தொகுப்பாகிய இந்நூலைத் தொகுத்தவர் யார்என அறிய முடியவில்லை. இப்பாடல்கள் நான்கடிச் சிறுமையும், நாற்பதடி பெருமையும் உடையன. 160 புலவர்களால் பற்பல காலங்களில் பாடப்பட்டவையாகும். புறநானூறு பாடிய புலவர் பெருக்களில் பெரும்பாலோர்கடைச் சங்க காலத்தவராவர். பண்டையத் தமிழகத்தை ஆண்ட முடி மன்னர், சிற்றரசர், அரச மகளிர்வரலாறுகள் அறிந்தற்கு இந்நூல் மிக இன்றியமையாததாகும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "புகழ் எனில் உயிரும் கொடுக்குவர் பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்" என்பன போன்ற உயர்ந்த வாழ்க்கைத் தத்துவங்களும் இந்நூலில் இடம் பெறுகின்றன. இத்தகையச் சிறப்பு மிக்க நூலில் துளைக்கருவிகளைப் பற்றிய செய்திகள் பதிவு செய்யப் பெற்றுள்ளன.*

***துளைக்கருவிகள்***

*துளைகளின் வழியே வாயினால் ஊதியவுடன் ஒலி எழுப்பும் கருவிகள் அமைத்தும் துளைக்கருவிகள் ஆகும். அத்தகைய துளைக்கருவிகள் என்னும் பிரிவில் சங்கு குழல் தூம்பி எனும் மூன்று துளைக்கருவிகள் பற்றிய சான்றுகள் புறநானூற்றில் சான்றுகள் புறநானூற்றில் பதிவு பெற்றுள்ளன.*

***குழல் (கழை)***

*"கழை" என்பதற்கு மூங்கில் என்பது பொருள். ஊது கருவியாகிய மூங்கிலில் ஒரிது துளைகளை இட்டு ஊதினான். இதில் ஓரிரு சுரங்களை மட்டும் தொடக்கக் காலத்தில் வாசிக்க முடிந்தது. பின்னர் துளைகளை அதிகப்படுத்தி சுரங்களையும், அதிகப்படுத்தி வாசிக்கத் தொடங்கினான்.*

பின் படிப்படியாக வளர்ந்து சுரங்களை மட்டுமின்றி இராகங்களையும் வாசித்தான். “இசையியல் ஆய்வாளர்கள் சூழலினை நான்கு வகைகளாகப் பகுத்துள்ளனர். அவை அடுக் குக்குழல்கள், விசில் குழல்கள், மூக்கினால் ஊதப்பெறும் குழல்கள் பக்கவாட்டில் ஊதப்பெறும் குழல்கள் என்பனவாகும். (சு. தமிழ்வேலு, நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் குழல், ப.266) “வங்கு இயம் ஸ்ரீ வங்கியம். வங்கு ஸ்ரீ வளைவு, வங்குஸ்ரீ வளைவுடைய மூங்கில் இயம் - ஊத்தயம், இசைவாய் இசைவாய் அமைக்கப்பட்டது. இயம்” (தமிழிசைக் கலைக்களஞ்சியம், தொகுதி2, ப.164)

## குழலின் வகைகள்

சங்க இலக்கியத்தில் ஆம்பல் சூழல் கொன்றைக் குழல் எனும் இருவகையான குழல்கள் பதிவாகியுள்ளன.

## ஆம்பல் குழல்

முல்லை நிலத்தின் பல இங்களில் ஆம்பல் என்னும் பண்ணை இனிமையான குழலின் பலமுறை இசைப்பர்.

## கொன்றைக் குழல்

கொன்றைக் குழல் என்பது கொன்றைக் காயைக் குடைந்து செய்யும் குழல் என்பதைச் சங்க இலக்கியம் தருகின்றது. (இரா. கலைவாணி, தமிழ் வேலுசங்க இலக்கியத்தில் இசை.ப.217)

“தீக்கடைக் கோலினைத் தீயில் காய்ச்சி கொன்றைக் காய்களில் துளையிட்டு அதில் பண்ணிசைத்துப் பாடியுள்ளனர்” (மேலது, ப.218) கொன்றையந் தீங்குழல் ஐந்து நரம்புகள் கொண்ட பண். அதாவது திறப்பண், ஒடை கராகம், உரையாசிரியர்களின் சிலர் கொன்றை, ஆம்பல், முல்லை என்பன கருதி என்றும் சிலர் பண் என்றும் கூறியுள்ளனர் (தமிழிசைக் களஞ்சியம், தொகுதி,2 ப. 221)

## புறநானூற்றில் குழல்

காஞ்சித்திணையில் தொடாக் காஞ்சி எனும் துறையில் மறக்குடி மகள் ஒருத்தியின் மாண்பினை எடுத்துக்காட்டும் விதமாக அரிசில் கிழார்கீழ்கண்டப் பாடலைப் பாடினார். இதில் “குழல்” பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது. புறம்:281-4.

பெருந்திணையில் குறுங்கலி தாபதநிலையுமாம் எனும் துறையில் பேகன் தன் மனைவி கண்ணகியைத் துறந்து நல்லூர்ப் பரத்தையிடம் புறஒழுக்கம் உடையவனாய் இருந்தான். அதனைக் கண்ட கபிலர் அவனைத் திருத்த எண்ணினார். தாம் கூறுவதைப் பாணன் கூற்றாக வைத்து கீழ்கண்ட பாடலைப் பாடினார். ஆதில் “குழல்” பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது. காண்க: புறம்: 143:15.

## கண்விடு தூம்பு

“சங்க காலத்தில் பயன்பாட்டிலிருந்த துளைக்கருவிகளில் ஒன்று “கண்விடு தூம்பு” அல்லது “தும்பு” எனும் கருவி. இக்கருவி பெருவங்கியம் என்றுஅழைக்கபடுகின்றது.நீண்டதுளையுடைய குழாய் போன்றது என்பதால் தூம்பு என்று அழைக்கப்பட்டுள்ளது. துளையுடைய பு, தும்பை, துளையுடைய கை தும்பிக்கை, துளையுடைய மூங்கில் தூம்பு(வீ.ப.கா. சுந்தரம், தமிழிசைக் கலைக்களஞ்சியம், இ. தொ. ப.25) சங்க இலக்கியத்தில் தூம்பென்னும் கருவியின் பயன்பாடு பலவாறாக இருந்திருக்கின்றது. மலைப்பாக்கத்தில் எழும் இயற்கை ஒலியில் கலைமான் கூட்டத்தினால் எழும் தாழ்ந்த ஒலி தூம்பினொலியை ஒத்துள்ளது. தும்பி வண்டின் இமிர்தல் ஒலியும் தூம்பின் ஒலிபோல் அமைந்துள்ளது. கோடியர்கள் மன்னரைப் புகழ்ந்து பாடும் போது உடல் தூம்பை இசைத்துள்ளனர். பாடும் போது குழு இசையில் இத்தூம்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. பாண்மரபினர் தம் இசைநிகழ்ச்சிக்காகப் பல ஊர்களுக்குச் செல்லும்போது தூம்பையும் சுமந்து சென்றுள்ளனர்.

## புறநானூற்றில் தூம்பு

பாடாண்திணையில் பரிசில் விடை எனும் துறையில் வல்வில் ஓரியைப் புகழ்ந்து வன்பரணர் கீழ்க்கண்டப் பாடலைப் பாடினார். இதில் தூம்பு பற்றிய செய்தி பதிவாகியுள்ளது. காண்க புறநா. 152-15

**சங்கு**

சங்க காலத்தில் இருந்தே சங்கு பல பயன்பாடுகளைப் பெற்றுத்திகழ்ந்திருக்கின்றது. மனிதன் தன்னுடைய இருப்பை தெரிவிக்கப் பயன்படுத்திய சங்கு பிற்காலத்தில் வேறு பல நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. சங்கின் ஒலி மிக நீண்ட தொலைவிற்கு கேட்கும் தன்மையுடையது. இன்றைக்கு அய்யா வழிபாட்டிலிலும் சங்கு பயன்படுத்தப்படுகிறது. திருமாலின் ஆயுதமாகவும் சங்கு என்ற கருவி, கோடு, வலம்புரி, வளை என்றெல்லாம் பெயர் பெற்றுள்ளது. (இரா.கலைவாணி, சு.தமிழ்வேலு, சங்க இலக்கியத்தில் இசை, ப.214) பொதுவாக வலப்பக்கத்தோடு தொடர்புடையப் பொருட்கள் சிறப்பிடம் பெறுவதுண்டு, சங்கிலும் வலம்புரிச் சங்கு சிறப்புடையதாகச் சங்க இலக்கிய காலத்திலேயே கருதப்பட்டுள்ளது. இதனைப் பெரும்பாணாற்றுப்படை,

**“வலம்புரி அன்ன வசை நீங்கு சிறப்பின்”**

**(பெரு.35)**

**“கொக்கரை என்பது வலம்புரிச் சங்கு என்கிற ஊதுகருவி”**

**(தமிழிநை கலைக்களஞ்சியம், தொ. 2, ப.204)**

கிளிஞ்சலான ஊதுகுழல்கள் மிகப் பழங்காலத்தைச் சேர்ந்தவை. இவை இசைக்கவும், செய்திகள் அனுப்பவும் உலகெங்கும் பயன்படுத்தப்பட்டன. தொன்மையான நாகரிகங்களாகிய அஸ்ஸியா, மெக்ஸிகோ பெரு, சீனா, இந்தியா ஆகியவற்றில் இசை இருந்தன” (பி. ஐசதன்ய தேவ. இசைக்கருவிகள், ப.96) பாரத நாட்டில் கன்னியாகுமரி முதல் இமயமலை வரை குஜராத் முதல் மேகாலயா வரையில் காணப்படும் இசைக்கருவி சங்கு. பழங்காலத்தில் போர்த்துவக்கத்தை அறிவிக்கும் ஒரு கருவியாக இருந்தது. இக்காலத்தில் இது புசை, நாடோடி, இசை, நடனம் இவற்றிற்குப் பயன்படுகிறது. முன்பு இது பஞ்ச முகாசப்தத்தில் ஒன்றாக இருந்தது. இக்காலத்தில் பஞ்ச வாத்தியங்களுள் முக்கிய இடம் பெறுகின்றது.

திருச்சீரலைவாய் எனும் திருச்செந்தூரில் முருக வழிபாட்டின் போது பிற இசைக்கருவிகளுடன் சங்கும் இசைக்கப்பட்டுள்ளது. இச்செய்தியியை,

**“வயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞரல”**

**(திரு.120)**

எனும் ஆற்றுப்படைப் பாடல் வரி தெரிவிக்கின்றது. இத்தகைய நிகழ்வு இன்றும் காணப்படுகின்றது.

**புறநானூற்றில் சங்கு**

பாடாண்திணையில் வாழ்த்தியல் எனும் துறையில் குமணனை பெருஞ்சித்திரனார் பாராட்டும் விதமாக கீழ்கண்டப் பாடலைப் பாடினார். இதில் “சங்கு” பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது. புறம்,158:1 225:11-12 பொதுவியல் திணையில் கையறுநிலை எனும் துறையில் சோழன் நலங்கிள்ளியை ஆலத்தூர்கீழார் பாடிய பாடலில் கீழ்கண்ட பாடலில் “சங்கு” பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது. புறநா.225:11-12. புாடாண்திணையில் பரிசில் விடை கடைநிலை வியையுமாம் எனும் துறையில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை எருக்காட்டுத் தாயங்கண்ணனார்பாடியதாகக் கீழ்கண்ட பாடல் அமைகிறது. இதில் “சங்கு” பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது.